# கூடுதல் சார்பு நீதிமன்றம், திருப்பூர்.

**OS.No. 124/2022**

திரு. சுப்பிரமணியம் (P.W. –1) **09.03.2026**

**<u>சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு 5 ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை :</u>**

சாட்சி ஆஜர். சாட்சி சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டார்.

1. 5 ம் பிரதிவாதி சிவக்குமாரை எனக்கு தெரியும் என்றால் ஆமாம். தாவா சொத்தில் எனக்கு 3/6 பங்கு உள்ளது என்றால் ஆமாம். அவ்வாறு எனக்குப் பாத்தியப்பட்ட பாகத்தில் ஒரு பாகத்தை ஐந்தாம் பிரதிவாதி சிவக்குமாருக்கு நான் கிரயம் செய்து கொடுத்துள்ளேன் என்றால் சரி. நான் எனக்குப் உள்ள பாக உரிமை சொத்தில் ஒரு பாகத்தை ஐந்தாம் பிரதிவாதிக்கு கிரயம் செய்து கொடுத்த விவரங்கள் என்னுடைய சகோதர, சகோதரிகளுக்கு நன்கு தெரியும் என்றால் ஆமாம்.

2. ஐந்தாம் பிரதிவாதி என்னிடம் இருந்து கிரயம் பெற்ற சொத்துக்களை பிரித்து தனி சுவாதீனம் கொடுக்க வேண்டி என்னிடமும் மற்ற பாகதாரர்களிடமும் கேட்டார் என்றால் சரி. பலமுறை கேட்டும் அவர் உரிய பாகத்தை பிரித்துக் கொடுக்கவில்லை என்றால் தவறு. தாவாவில் எனக்கு மூன்று பாக உரிமை இருந்தாலும் ஐந்தாம் பிரதிவாதிக்கு சொத்தை கிரயம் செய்து கொடுத்ததின் அடிப்படையில் இரண்டு பாகம் பிரித்து தரும்படி தான் பரிகாரம் கோரியுள்ளேன் என்றால் சரி. கிரைய ஆவணத்தின் அடிப்படையில் தாவா சொத்தில் ஒரு பாகத்தை பெற ஐந்தாம் பிரதிவாதிக்கு உரிமை உள்ளது என்றால் சரி. அதன் அடிப்படையில் ஐந்தாம் பிரதிவாதி ஒரு பங்கு பெற தகுதி உடையவர் என்றால் ஆமாம்.

**2 ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை**

1. தாவா சொத்தை தவிர என்னுடைய தகப்பனாருக்கு வேறு சொத்துக்கள் இருந்தது என்றால் ஆமாம். ஒரு சொத்தை விற்று எல்லோருக்கும் பாகம் கொடுத்துள்ளோம். விற்பனை செய்த சொத்திற்கு உரிய ஆவணங்களை இந்த வழக்கில் தாக்கல் செய்துள்ளேன் என்றால் இல்லை. என்னுடைய தகப்பனாருக்கு

தாவா சொத்தை தவிர அவருடைய வேறு சொத்துக்கள் எதுவும் விற்பனை செய்யவில்லை தவறாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. என் உடன் பிறந்தவர்களில் நான்கு சகோதரிகள் என்றால் சரி. அதில் ஒரு சகோதரி தற்சமயம் உயிருடன் இல்லை என்றால் ஆமாம். இறந்து போன ஒரு சகோதரியின் வாரிசுதாரர்கள் தான் 3, 4 பிரதிவாதிகள் என்றால் சரி.

2. 1,2 பிரதிவாதிகள் என்னுடைய சகோதரன் மற்றும் சகோதரி என்றால் சரி. வா வா சொத்தில் இரண்டாம் பிரதிவாதி தான் தற்சமயம் சுவாதீனத்திலிருந்து அனுபவம் செய்து வருகிறார் என்றால் தவறு. நான் தான் இருந்து வருகிறேன். 27 வருடங்களாக என்னுடைய பராமரிப்பில் உள்ளது. நிலவரி என்னுடைய பெயரில் மாற்றப்பட்டதா என்றால் இல்லை. சாமிநாதன் தான் தாவா சொத்தை பராமரித்து வரியெல்லாம் செலுத்தி வருகிறார் என்றால் தவறு. தாவா சொத்திற்குரிய நிலவரியை என் பெயரில் செலுத்தியிருந்தால் நான் என் பெயரில் அதை மாற்றம் செய்திருப்பேன் என்றால் சரியல்ல. பொதுவாக இருக்கும் சொத்தை மாற்ற முடியாது.

3. என்னுடைய தகப்பனாருக்கு பாத்தியப்பட்ட எல்லா சொத்துக்களையும் சேர்க்காததால் தாவா தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல. தாவா சொத்துக்கள் இல்லாமல் எல்லா சொத்துக்களையும் என்னுடைய தகப்பனார் உயிருடன் இருந்தபோது பிரித்துக் கொடுத்துவிட்டார் என்றால் சரி. ஏற்கனவே பாகப்பிரிவினை ஏற்பட்ட சொத்துக்களை மீண்டும் பாகம் செய்ய முடியாது என்றால் தவறு. ஏற்கனவே விற்ற சொத்துக்கு உரிய தொகையை தான் கொடுத்துள்ளோம். மற்ற பாகதாரர்களுக்கு விற்ற சொத்தில் கிரைய தொகையை பாகம் கொடுத்ததற்கு ரசீது உள்ளதா என்றால் உள்ளது. அதை நீதிமன்றத்தில் தாக்கல் செய்து உள்ளீர்களா என்றால் சரி கொடுக்கவில்லை.

4. உண்மையிலேயே சொத்து விற்பனை செய்யப்பட்டு கிரைய தொகை பிரித்து கொடுத்து இருந்தால் அதற்குரிய ஆவணங்களை தாக்கல் செய்திருப்பேன் என்றால் சரியல்ல. தாவா சொத்தை அபகரிக்க வேண்டி பொய் வழக்கு தாக்கல் செய்து பொய்

சாட்சியம் அளிக்கிறேன் என்றால் தவறு. தாவா செலவு தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டும் என்றால் தவறு.

சாட்சியின் கூற்று என் முன்னிலையில் தட்டச்சு செய்யப்பட்டு, படித்துக் காண்பிக்கப்பட்டது. சாட்சி சரியாக உள்ளதென ஒப்புக் கொண்டு கையொப்பமிட்டார்.

K R KANNAN Digitally signed by K R KANNAN Date: 2026.03.09 12:53:36 +0530

கூடுதல் சார்பு நீதிபதி,
திருப்பூர்.